முரசு

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரால்
பாடப்பெற்றது.

(All rights reserved.)

3-வது பதிப்பு]   1941   [விலை 0—0—6

முரசு

வெற்றி யெட்டுத் திக்கு மெட்டக்
கொட்டு முரசே
வேத மென்றும் வாழ்க வென்று
கொட்டு முரசே
நெற்றி யொற்றைக் கண்ண னோடே
நிர்த்தனஞ் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று
கொட்டு முரசே.

1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக்கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்.

2. வேத மறிந்தவன் பார்ப்பான்,—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்.
நீதி நிலை தவறாமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.

3. பண்டங்கள் விற்பவன் செட்டி,—பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி,
தொண்டரென் றோர்வகுப்பில்லை;—
சோம்பலைப் போ லிழி வில்லை. [தொழில்

4. நாலு வகுப்புமிங் கொன்றே;—இந்த
நான்கினி லொன்று குறைந்தால்,
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி.

5. ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவ ளன்னை;

6. ஏவல்கள் செய்பவர் மக்கள்;—இவர்
யாவரு மோர் குலமன்றோ?

மேவி யனை வரு மொன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

7. சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ் வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

8. சாதிக் கொடுமைகள் வேண்டாம்,—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

9. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்;
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

10. கண்க ளிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடும், காணீர்.

11. தெய்வம் பல பல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர் ;
உய்வ தனைத்திலு மொன்ருய்—எங்கும்
ஓர் பொரு ளானது தெய்வம்.

12. தீயினைக் கும்பிடும் பார்ப்பார்,—நித்தந்
திக்கை வணங்குந் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்—

13. யாரும் பணிந்திடும் தெய்வம்,—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வ மொன்று;—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

14. வெள்ளை நிறத்தொரு பூனை;—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர் ;
பிள்ளைகள் பெற்றதப் பூனை ;—அவை
பேருக் கொரு நிறமாகும் ;

15. சாம்பல் நிறமொரு குட்டி,—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,

பாம்பு நிறமொரு குட்டி,—வெள்ளைப்
பாலி னிறமொரு குட்டி.

16. எந்த நிறமிருந்தாலும்—அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்ற மென்றுஞ் சொல்லலாமோ?

17. வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்
மானுடர் வேற்றுமை யில்லை. [—அதில்
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்
யாவர்க்கு மொன்றெனல் காணீர். [—இங்கு

18. நிகரென்று கொட்டு முரசே,—இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே,—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.

19. அன்பென்று கொட்டு முரசே,—அதில்
ஆக்க முண்டா மென்று கொட்டு;
துன்பங்கள் யாவுமே போகும்,—வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனால்.

20. அன்பென்று கொட்டு முரசே,—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரு மொன்றென்று கொண்டால்.

21. உடன் பிறந்தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல்லாரும்;
இடம் பெரிதுண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

22. மரத்தினை நட்டவன் தண்ணீர்—நன்கு
வார்த்ததை யோங்கிடச் செய்வான்;
சிரத்தை யுடையது தெய்வம்,—இங்கு
சேர்த்த வுணவெல்லை யில்லை.

23. வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழு மனிதரெல் லோர்க்கும்;
பயிற்றி யுழுதுண்டு வாழ்வீர்!—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.

24. உடன் பிறந்தவர்களைப் போலே—இவ்
வுலகினில் மனிதரெல் லோரும்;

திடங் கொண்டவர் மெலிந்தோரை—இங்கு
தின்று பிழைத்திட லாமோ ?

25. வலிமையுடையது தெய்வம்—நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம் ;
மெலிவு கண்டாலுங் குழந்தை—தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ ?

26. தம்பி சற்றே மெலிவானல்— அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ ?
செம்புக்குங் கொம்புக்கு மஞ்சி—மக்கள்
சிற்றடிமைப் படலாமோ ?

27. அன்பென்று கொட்டு முரசே,—அதில்
யார்க்கும் விடுதலை யுண்டு ;
பின்பு மனிதர்க ளெல்லாம்—கல்வி
பெற்றுப் பதம் பெற்று வாழ்வார்.

28. அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய் ;
சிறியரை மேம்படச் செய்தால்,—பின்பு
தெய்வ மெல்லோரையும் வாழ்த்தும்.

29. பாருக்குள்ளே சமத்தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்குந் தீமை செய்யாது—புவி
யெங்கும் விடுதலை செய்யும்.

30. வயிற்றுக்குச் சோறிடவேண்டும்—இங்கு
வாழு மனிதருக் கெல்லாம் ;
பயிற்றிப் பல கல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

31. ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே ;
நன்றென்று கொட்டு முரசே,—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

பாரதி நூல்கள்

நேர்த்தியான காலிகோ பைண்டு

(LIBRARY EDITION)

கவிதைகள். தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி, பாப்பாப் பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன. ரூ. 2—12—0

வசனங்கள். இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோகஸூத்ரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கியுள்ளன. ரூ. 2—12—0

கட்டுரைகள். தத்துவம், மாதர், கலைகள், சமூகம் அடங்கியுள்ளன. ரூ. 2—12—0

பகவத்கீதை நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியார் எழுதிய அழகிய தமிழ் உரையும் அடங்கியது.

பாக்கெட் சைஸ் (காலிகோ) அணா 0—8—0

,, (ராப்பர்) ,, 0—6—0

பாரதியாரும் அவர் நூல்களும்

(BHARATI & HIS WORKS)

ஸ்ரீ ஸி. விசுவநாதன், பி. ஏ., எல். டி., யால்

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரிய நூல்.

விலை அணா 0—4—0

பாரதிபிரசுராலயம்,

567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

Hindi Prachar Press, Thyagarayanagar, Madras.